2946

T.N.L.A. Debates

Official Report

Vol 27

No. 3

12th May 1986

D
V211,31 N86
N86·27·3
136491

வெளியீடு 3-2-1987 Issued 3-2-1987

2946

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 12, 1986-தொகுதி 27 எண். 3
Monday the May 12, 1986-Volume 27 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
**Legislative Assembly Secretariat, Fort St. George, Madras-600009**

விலை ரூ. 3] [Price Rs. 3

V211,31'N86

N86.27.3

136491

600 008

## உள்ளடக்கம்.

12—5—1986

1. இரங்கல் தீர்மானம் : 305—314

பேரவை உறுப்பினர் திரு. எஸ். நாராயணன் அவர்கள் மறைவு குறித்து: 305

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். 306—307

திரு. உ. சுப்பிரமணியன். .. 308

திரு. சு. பாலன். .. 309

திரு. கு. ரமணி. .. 309

திரு. பொ. உத்திராபதி. .. 310

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் .. 311

டாக்டர் தே. குமாரதாஸ் . 312

திரு. பி. கே. எம் முத்துராமலிங்கம் .. 313

திரு. கு. தமிழரசன் .. 313

2. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள். .. 314

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## 1986, மே 12, திங்கட்கிழமை

### சித்திரை 29, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு—2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி

விழிப்பது போலும் பிறப்பு.''

இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலைப் போன்றது; பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கல் தீர்மானம்.

பேரவை உறுப்பினர் திரு. எஸ். நாராயணன் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தொகுதியில் இருந்து இப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் திரு. பாளை. எஸ். நாராயணன் அவர்கள் நேற்று மாலை (11-5-86) மாரடைப்பால் மறைந்த துயரச் செய்தியை இப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''இனிய பண்பும், நல்ல உள்ளமும், செயல் ஆற்றல் திறனும் கொண்டவரும், இப்பேரவையில், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருமாகிய திரு. எஸ். நாராயணன் அவர்கள் நேற்று மாலை மாரடைப்பால் மறைந்த துயரச் செய்தி கேட்டு இப்பேரவை மிகவும் வருந்துகிறது. அன்னாரின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது''

மாண்புமிகு உறுப்பினர் பாளை எஸ். நாராயணன் அவர்கள்
நேற்றைய முன்னாள் வரையிலும் சட்டமன்ற நிகழ்ச்சிகளிலே
கலந்து கொண்டிருந்து விட்டு, எல்லோருடனும் இனிமையாகப்
பேசி, பழகிக் கொண்டு தான் இருந்தார்கள். நேற்று காலை
தான் அவர் நெல்லை போய்ச் சேர்ந்தார். சேர்ந்தவுடனே
எட்டு மணி அளவில் அவருக்கு திடீரென்று மாரடைப்பு
ஏற்பட்ட உடனேயே அவரை பாளையங்கோட்டை மருத்துவ
மனையிலே சேர்த்து தீவிரமான சிகிச்சை அளித்திருக்
கின்றார்கள். ஆக, சிகிச்சை அளித்தும், பலன் ஏற்படாத
வகையில் மாலை 3-15 மணி அளவிலே அவர் மறைந்து இருக்
கின்றார். ஆகவே, பெரியதொரு அதிர்ச்சியை அனைவருக்கும்
தரத்தக்க அளவிற்கு அவருடைய மறைவு ஏற்பட்டிருக்கின்றது.
அண்மையிலேதான் அருப்புக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த
மாண்புமிகு உறுப்பினர் பிச்சை அவர்கள் எதிர்பாராத
ஆபத்திலே சிக்கி மறைந்ததன் மூலமாக ஏற்பட்ட அதிர்ச்சி
யிலிருந்து நாமெல்லாம் மீள முடியாத நிலையில், மற்றொரு
அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள வேண்டிய அவல நிலைக்கு
இந்த அவை ஆளாகியிருப்பது உள்ளபடியே பெருந்துன்பத்தை
அளிக்கக்கூடிய ஒன்றாகும்.

பாளை நாராயணன் அவர்களுக்கு வயது 54 தான்.
அவர்கள் ஆரம்பக் காலத்திலேயிருந்தே திராவிட இயக்கத்திலே
நீங்காப்பற்றும், தனியா ஆர்வமும் கொண்டு கொள்கை
களுக்காகப் பாடுபடுகின்ற நல்ல செயல் வீரராகத் திகழ்ந்தவர்கள்
ஆவார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தினிடத்திலே நெருங்கிய தொடர்பு வைத்து அதனுடைய
கொள்கைகளைப் பரப்புகின்ற பணிகளிலே மிகத் தீவிரமாக ஈடு
பட்டு வந்தவர்கள் ஆவார்கள்.

1984-இலே நடைபெற்ற பொதுத் தேர்தலில் நெல்லை
தொகுதியிலே அவர்கள் போட்டியிட்டு நல்ல சிறப்பான
முறையில் வெற்றி பெற்று இந்த அவைக்கு முதன் முறையாக
அவர்கள் வருகை தந்தார்கள்.

அவர்கள் பொது வாழ்க்கையிலே நீண்ட பெரும் காலமாகவே
நல்ல தொடர்புகளைக் கொண்டு அரும்பணிகள் பலவற்றையும்
ஆற்றி வந்திருக்கின்றார்கள்.

பாளையங்கோட்டை நகராட்சிமன்ற உறுப்பினராக 1964-
இலிருந்து 1969-வது ஆண்டு வரையிலும் பாளையங்கோட்டை
நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியவர்கள்,
1969-ஆம் ஆண்டிலிருந்து 1976-வது ஆண்டு வரையில்
பாளையங்கோட்டை நகராட்சி மன்றத் தலைவராகயிருந்து
பாளையங்கோட்டை நகர் வாழ் மக்களுடைய நல்ல அன்பையும்,
அரவணைப்பையும் பெற்று, எல்லோருடைய பாராட்டு
தலையும் போற்றுதலையும் பெற்று சிறப்பாகத் திகழ்ந்தவர்கள்
ஆவார்கள்.



அது மட்டுமல்லாமல், கதர் வாரியத்தினுடைய துணைத்
தலைவர் பொறுப்பையும் ஏற்று சில ஆண்டுக்காலம் அவர்கள்
பணிபுரிந்து இருக்கின்றார்கள்.

அதோடு, தொழில் முதலீட்டுக் கழகத்தினுடைய இயக்குநர்
களிலே ஒருவராக இருந்து அந்தப் பொறுப்பையும் ஏற்று
சிறப்பான பணிகளை ஆற்றி இருக்கின்றார்கள்

அறநிலையத் துறையினுடைய வட்டாரக் குழுவினுடைய
தலைவராக இருந்து பணியாற்றியும் வந்திருக்கிறார்கள்.
இப்படி பல்வேறு பொதுப் பொறுப்புகளிலே இடம் பெற்று,
அவற்றின் மூலமாக பொது மக்களுக்கு ஆற்ற வேண்டிய
தொண்டுகளை மக்களுக்கு சிறப்பாக ஆற்றியவர். தொகுதி
வாழ் மக்களுடைய குறைகளைப் போக்குவதிலே மிகவும்
கண்ணும் கருத்துமாக இருந்த அவர்கள், மனம் கோணாத
அளவிற்கு பாடுபடுகின்ற பண்பு படைத்தவர்கள் என்பது மட்டு
மல்லாமல், கழகத்தினுடைய பணிகளை சிறப்புற செய்வதிலேயும்
மிக ஈடுபாடு கொண்டவர்கள் ஆவார்கள்.

அது மட்டுமல்லாமல் கழகக் கொள்கைகளிடத்திலே பிடிப்பு
கொண்டு இருந்தவர், ஆரவாரமற்றவர், படாடோபமற்றவர்,
அவர் எடுத்த பணிகளை முடிக்க வேண்டும் என்பதிலே முனைப்பு
உள்ளம் கொண்டவர். அப்படிப்பட்ட இனிய பண்புகளுக்கு
உறைவிடமாக விளங்கியவர். அப்படிப்பட்ட ஒரு நல்ல நண்பரை
இந்த அவை இழந்து விட்டது என்பது இந்த அவையில் உள்ள
அத்தனை பேர்களுக்கும் அதிர்ச்சியையும், வேதனையையும்
பெரும் வருத்தத்தையும், துக்கத்தையும் துயரத்தையும்
அளிக்கக்கூடிய ஒரு செய்தியாகும். அவர்கள் மறைவு
குறித்து இந்தப் பேரவை தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை,
அன்னாருடைய குடும்பத்திற்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும்,
தெரிவித்துக் கொள்கிறது என்ற இந்த தீர்மானத்தை இந்தப்
பேரவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நேற்று கிடைத்த அதிர்ச்சி தரும் செய்தி, நம்முடன்
நேற்று முன் தினம் வரை பணியாற்றிய அருமை நண்பர் பாளை
நாராயணன் அவர்கள் திடீரென காலமுற்ற செய்தி நம்மை
அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. அண்மையில்தான் அருப்புக்
கோட்டைத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. பிச்சை
அவர்கள் விபத்தில் மரணம் அடைந்த செய்தி கேட்டு, அந்த
அதிர்ச்சியிலிருந்து இன்னும் நாம் விடுபடாத நிலையில் மீண்டும்
ஒரு அதிர்ச்சிக்கு நாம் ஆளாகி இருக்கிறோம். நம்முடைய
பாளை நாராயணன் அவர்கள் மிகச் சிறந்த முறையிலே பொது
ஜன சேவை செய்தவர் என்று அந்த மாவட்டம் முழுவதும் உள்ள
அனைத்துக் கட்சியினராலும் பாராட்டப் படுகின்றவர்.
சாதாரண மக்களிடமும் எல்லாத் தரப்பு மக்களிடமும் நல்ல
முறையில் இனிய சுபாவத்துடன் பழகி, அவர்களுடைய

பிரச்சனைகளுக்கு வேண்டிய காரியங்களை ஆற்றுவதற்கு எல்லா விதமான முயற்சிகளையும் எடுத்து, கட்சி பேதமின்றி, ஜாதி பேதமின்றி உழைத்து வந்தார் என்ற செய்தி அவரைப் பற்றிய ஒரு நல்ல செய்தியாகும். இப்படி ஒரு நல்ல உள்ளம் கொண்ட, தூய தொண்டரை இழந்து நிற்கின்ற அன்னாருடைய குடும்பத்தினருக்கும், அவரைச் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அவருடைய இழப்பு மிகப் பெரிய இழப்பு என்பது மட்டுமல்லாது, அடுத்தடுத்து ஏற்பட்ட இந்த இழப்புகள் நம்முடைய இந்த மன்றத்திற்கும் பெரிய அதிர்ச்சியாக இருக்கின்ற காரணத்தால், அவருடைய மறைவு குறித்து பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்து இருக்கின்ற இரங்கல் தீர்மானத்தை நான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாக வழிமொழிந்து, என்னுடைய அனுதாபத்தையும் அவருடைய குடும்பத்திற்கு தெரிவித்து, அமர்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மறைந்த திருநெல்வேலி தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர் பாளை எஸ். நாராயணன் அவர்கள் சனியன்று இந்தப் பேரவையில் கலந்து கொண்டு, நம்முடன் கலந்து பேசி, நம்மை எல்லாம் பார்த்துவிட்டு, வீட்டுக்குச் சென்ற பிறகு அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையிலே அனுமதிக்கப் பட்டு இருக்கிறார் என்ற செய்தியை பத்திரிகையிலே நாம் பார்க்கிறபோது, அவர்கள் உள்ளபடியே இறந்து போய்விடுவார் என்ற நம்பிக்கை நமக்கு எல்லாம் ஏற்பட்டு இருக்காது. அதுவும் மனிதனுக்கு நோய் ஏற்படுகிற நேரத்தில், மருத்துவர்கள் அதை எல்லாம் சரி செய்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை இன்றையதினம் உலகத்தில் இருக்கிற நேரத்தில், இப்படிப்பட்ட இந்த வியாதியால் தாக்கப்பட்டு, பாளை எஸ். நாராயணன் அவர்கள் மறைந்த செய்தி நமக்கு எல்லாம் ஒரு பேரதிர்ச்சியாக இருந்துகொண்டு இருக்கிறது. இந்தக் கூட்டத் தொடரிலே இரண்டு சட்டப் பேரவை உறுப்பினர்களை நாம் இழந்திருப்பது அதைவிட மிக்க அதிர்ச்சியாக இருந்துகொண்டு இருக்கிறது. மறைந்த நாராயணன் அவர்கள் திராவிட இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பொதுமக்களிடத்திலே நல்ல பேராதரவு காட்டி, பொது சேவை செய்த ஒரு தொண்டராக விளங்கியவர். அதனால்தான் அவர்கள் பாளையங்கோட்டை நகராட்சியிலே உறுப்பினராக தேர்தெடுக்கப் பட்டு, அதன் பிறகு, அதனுடைய தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டு பணியாற்றினார் என்றால், பொதுமக்களிடத்திலே அவர் எவ்வளவு செல்வாக்கு பெற்று இருக்கிறார் என்பதை நாம் எல்லாம் நினைக்கக்கூடிய கட்டாயத்தில் இருந்து கொண்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட நல்ல தொண்டர்களை மக்களுக்கு

(முற்பகல் 9-10)

சேவை செய்யக்கூடிய பொறுப்பாளிகளை இன்றையதினம் நாடு இழக்கிறது. அது பொதுமக்களுக்கும் மிக தாங்கமுடியாத ஒரு துயரத்தை இன்றையதினம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆக ஒரு நல்ல தொண்டரை இழந்து வாடுகின்ற நிலையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்



இருக்கிறது. அவர்களுக்கு இது ஒரு பேரிழப்பாக இருந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் அவர் ஆற்றிய பணிகளை நாம் மனதில் கொண்டு அவருக்கு நாம் நன்றி தெரிவிக்கும் வகையிலே, அவரைப் போல் நாமும் மக்களுக்கு தொண்டாற்றக்கூடிய வாய்ப்பை நாம் பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அவரை பிரிந்து வாடுகின்ற அன்னாரது குடும்பத்தினருக்கும், தொகுதி மக்களுக்கும் அவரைச் சார்ந்திருக்கின்ற கட்சிக்கும், நம்முடைய முன்னவர் அவர்கள் கொண்டுவந்த அந்த தீர்மானத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் வழிமொழிந்து அமர்கிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் திரு. நாராயணன் அவர்கள் நேற்று வரையிலும் நம்மோடு அவையிலே இருந்து செயலாற்றியவர்கள். இப்போது நடக்கின்ற மரணங்கள், திடீர் மரணங்களாக வந்து நமக்கு பேரதிர்ச்சியை தந்து விடுகின்றன. இந்தக் கூட்டத் தொடரிலே இரண்டாவது உறுப்பினரை நாம் இழந்துள்ளது மிக சோகமான நிலை. அவர் தன்னுடைய வாழ்நாளில், திருநெல்வேலி மக்களுக்கு, நகரசபை உறுப்பினராக, தலைவராக நீண்ட பல வருஷங்கள் செயலாற்றி யிருக்கிறார் என்பதும், அவர் கொண்டுள்ள கொள்கையின்பால் மக்களை எப்படி ஆதரித்து மக்களுடைய பிரதிநிதியாக இருந்திருக் கிறார் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. அறநிலையத்தைச் சார்ந்த பணியிலும் அவர் ஈடுபட்டிருக்கிறார். இறுதியாக இந்த சட்டமன்றத்திற்கு உறுப்பினராக வந்து இன்னும் ஒரு டெர்ம் கூட, ஒருதரம் கூட முழுமையாக இந்த சட்டமன்றத்தில் இருந்து அவர் செயலாற்ற முடியவில்லை என்பது மிக வருந்தத்தக்க ஒரு விஷயம். ஆக இப்படிப்பட்ட ஒரு நல்ல ஊழியரை அதுவும் இளம் வயதிலேயே, இன்னும் பல ஆண்டுகள் செயல்பட வேண்டியவர், தன்னுடைய பொறுப்புகளை செய்யமுடியாமல் இறந்துபோவது என்பது ஆற்றமுடியாத ஒரு துன்பத்தையும், துக்கத்தையும் தருகிறது. அன்னாருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மரணம் காரண மாக தவிக்கின்ற அவரது குடும்பத்தினருக்கும், அவர் சேவை செய்த கட்சிக்கும் நமது மனமார்ந்த ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொண்டு, அவை முன்னவர் தெரிவித்திருக்கும்படியான தீர்மானத்தில் மார்க்சிஸ்ட் கட்சி தன்னையும் இணைத்துக் கொள் கிறது என்பதை தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டசபையில் 2–வது சட்டமன்ற உறுப்பினர் நாராயணன் அவர்களை இந்த சபை இழந்திருக்கிறது. அந்த தொகுதி மக்களும், நம்பிக்கையோடு ஒரு ஐந்தாண்டு காலத்திற்கு, அந்த தொகுதியின் பல்வேறு முன்னேற்றத்திற்கு பாடுபடக்கூடிய ஒரு நல்ல தொண்டரை, பணியாற்றக் கூடிய ஒரு நண்பரை

தேர்ந்தெடுத்து அனுப்பிய தொகுதி மக்களும் ஒரு பெரிய பேரிழப்பிற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதே போல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, அவர்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினரை இழந்து விட்டார்கள் என்று சொல்வதற்குப் பதிலாக இந்தச் சட்டப் பேரவை இரண்டாவதாக ஒரு சட்டமன்ற உறுப்பினரை இழந்து விட்டது என்று நினைக்கும்போது உண்மையிலேயே—நாளைய தினம் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்து நாம் அனைவரும் சந்தோஷத்தோடு போகக்கூடிய ஒரு நிலை மாறி—இந்த சபை யிலிருந்து கலைந்து செல்லுகின்றபோது ஒரு மன சஞ்சலத்தோடு வருத்தத்தோடு செல்லக்கூடிய ஒரு சோதனையை நாம் சந்திக்கக் கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கின்ற போது எதிர்காலத்திலாவது மக்களுக்கு பணியாற்றக் கூடிய சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, பொதுமக்கள் தொண்டனாக இருந்தாலும் சரி இப்படி சில நேரங்களில் வியாதி வருகின்றபோது அதை ஒரு அலட்சிய பார்வையோடு பார்த்து விடாமல் இதையெல்லாம் நாம் எதிர்நோக்கக்கூடிய அளவுக்கு நாம் சிந்திக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

மறைந்த திருநெல்வேலி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இந்த சட்டசபைக்கு முதல் தடவையாக வந்து அவர்களுடைய பணியை நிறைவாகச் செய்ய முடியவில்லை என்று நினைக்கிற போது உண்மையிலேயே அனைவருக்கும் இந்தச் செய்தியைக் கேட்டவுடனே பெரிய அதிர்ச்சியைத்தான் ஏற்படுத்தியது. மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. நாராயணன் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அவர்களுக்கு தலை வணங்கி அஞ்சலி செலுத்துவதோடு அவரை இழந்துவிட்டுத் தவித்துக் கொண்டிருக்கக்கூடிய அவருடைய குடும்பத்தினருக்கும் அனுதாபத்தைத் தெரிவித்து அதேபோல் ஒரு பொறுப்பான உறுப்பினரை இழந்து இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எங்களுடைய அனுதாபத்தைத் தெரிவித்து சட்டமன்ற உறுப்பினர் திரு. நாராயணன் அவர்கள் மறைவுக்காக இங்கே அவை முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இரங்கல் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வழிமொழிந்து அமர் கிறேன்.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அன்புக்குரிய அண்ணாச்சி பாளை நாராயணன் அவர்கள் நேற்று அகால மரணமடைந்தது குறித்து அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த அந்த இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக எங்களுடைய இரங்கலையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



நேற்று முன்தினம் நாங்கள் இருவரும் ஒன்றாகப் பக்கத்தில் இருந்து காஃபி சாப்பிட்டு சிரித்து விளையாடிக்கொண்டிருந்தோம். அரசியல் வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் ஆலோசனை கூறக்கூடிய வராக அவர் இருந்தார். எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆகிய எல்லோருடனும் அன்போடு சகோதர பாசத்தோடு பழகக் கூடிய நல்லவர் அவர். நாங்கள் எல்லாம் அவரை அண்ணாச்சி என்று அன்பாக அழைப்போம். அப்படிப்பட்ட ஒரு நல்லவரை, ஒரு நண்பரை இழந்து இன்று நாமெல்லாம் ஒரு ஆழ்ந்த துக்கத்திலே இருந்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக அவர்களுடைய வாழ்க்கையிலே நீண்ட நெடுங்காலமாக திராவிடபாரம்பரியத்திலே இருந்து பொதுமக்களுக்காக நல்லமுறையில் பணியாற்றி அதன் காரணமாக பல பொறுப்புக்களை, கட்சி பொறுப்புக்களை எல்லாம் அவர்கள் நல்ல முறையில் வகித்தவர்கள். அவர்களுடைய மறைவு தாங்கொணாத துக்கத்தைத் தந்துக்கொண்டிருக்கிறது.

அவரைப் பிரிந்து வாழும் அந்தக் குடும்பத்தாருக்கும் அவர் சார்ந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதன் தலைவருக்கும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக எங்களுடைய பரிவையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' திரு. பாளை நாராயணன் அவர்களுடைய மறைவு கேட்டு அனைவரும் அதிர்ச்சி அடைந்திருக்கின்ற இந்த நேரத்தில் அவரைப் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறலாம் என்று நான் கருதுகிறேன். அருமை அண்ணன் திரு. பாளை நாராயணன் அவர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு முன்பே எனக்கு அவரிடம் ஈடுபாடு உண்டு. நான் பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் பயின்று வந்தபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த அந்தக் காலத்தில் அதாவது 1978-79 வது ஆண்டு அங்கேயுள்ள மாணவர் களாகிய நாங்கள் எங்களுடைய கோரிக்கைகளை முன் வைத்து போராட்டம் நடத்தினோம். அந்த நேரத்தில் நாங்கள் போராட்டம் நடத்தியது தவறு என்று எல்லோரும் சுட்டிக்காட்டி னார்கள். அந்த நேரத்தில் கூட, உங்கள் பக்கம் நியாயம் இருக் கிறது, எனவே உங்களுக்காக நானும் சேர்ந்து அரசுடன் வாதாடு கிறேன் என்று சொல்லி எங்களை அழைத்து வந்து அன்றைக்கு சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. சௌந்திரராஜன் அவர்களிடத்திலே எங்களைப் பற்றிப் பேசி, குறைகளை எடுத்துச் சொல்லி, அந்தக் குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து தந்தார்கள். அப்போது கூட நாங்கள் ஜனதா

(முற்பகல் 9-20)

இயக்கத்தைச் சார்ந்தவர்களாகத்தான் செயல்பட்டுக்கொண்டிருந்தோம். அந்த நேரத்தில்கூட, அவர்கள் நாங்கள் வேறு கட்சியைச் சார்ந்தவர்கள், இந்த அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துகிறவர்கள் என்றெல்லாம் கருதாமல்கூட, மாறாக எங்களுடன் ஓடிவந்து, அந்த நேரத்திலே எந்த வகையில் எல்லாம் எங்கள் மாணவர்களின் இயக்கத்திற்கு தேவையான முக்கியமான கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றித் தந்து உதவ முடியுமோ அந்த வகையில் உதவிய அன்னாருடைய திருமுகத்தை நினைக்கிற போது, அவருடைய பண்பான செயல்களை நினைக்கும்போது, இந்த இழப்பைக் குறித்து உண்மையிலேயே மிக அதிர்ச்சியடைகிறோம். அப்படிப்பட்ட நல்லவர்.

குறிப்பாக சொல்லவேண்டும் என்றால், எல்லோரும் கூறுவதைப் போல ஜாதி மத இனங்களுக்கு அப்பாற்பட்டு எல்லோருடனும் பாசத்துடனும் பரிவுடனும் பழகுகிறவர். அந்த உத்தமரை இழந்து வாடுகின்ற அன்னாருடைய குடும்பத்தினருக்கு ஜனதா இயக்கத்தின் சார்பில் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவர் சார்ந்திருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கும், எங்கள் கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வழி மொழிந்து அமர்கிறேன்.

*திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாலைப் பத்திரிகையிலே பார்க்கிறபோது, நமது அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் பாளை எஸ். நாராயணன் அவர்கள் மறைந்த செய்தியை அதிலே கண்டு நாங்கள் அதிகமாக அதிர்ச்சியுற்றோம். இந்தச் சட்ட மன்றத்திலே தொடர்ந்து இரண்டாவது சட்டமன்ற உறுப்பினர் மறைந்திருக்கிறார். யாரும் எதிர்பார்க்காத ஒரு நிகழ்ச்சியாக இந்த இழப்பு இன்று ஏற்பட்டு இருக்கிறது. எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அமைதியான ஒரு பெரியவராக, முதன் முறையாக இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருந்தபோதிலும், பொது வாழ்விலே 20, 25 ஆண்டுக்காலமாக தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என்ற முறையிலே, எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாத ஒரு உறுப்பினராக அமைதியாக இந்த மன்றத்திலே இருந்து பணியாற்றியிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு மறைந்த செய்தி உண்மையிலேயே அத்தனை பேருக்கும் ஒரு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

அன்னாருடைய இழப்பை எண்ணி வருந்திக் கொண்டிருக்கிற அந்தத் தொகுதி மக்களுக்கும், இன்னும் அன்னாருடைய குடும்பத்தினருக்கும், அவரை இழந்து வாடிக் கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எங்க



ளுடைய அகில இந்திய ஃபார்வார்டு பிளாக் கட்சியினுடைய சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை வழி மொழிந்து அமர்கிறேன்.

*திரு. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் பாளை நாராயணன் அவர்களுடைய மறைவு மிகுந்த வேதனைக்குரியது. இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரே ஒரு சோகமயமான தொடராக இருந்துக் கொண்டிருக்கிறது. அருப்புக்கோட்டை பிச்சை அவர்கள் மறைந்ததைத் தொடர்ந்து, பாளை எஸ். நாராயணன் அவர்களும் மறைந்திருக்கிறார்கள். நமது சக உறுப்பினர்கள் இருவரை இந்தத்தொடரிலேயே நாம் இழந்துக் விட்டிருக்கிறோம்.

நகராட்சி மன்ற உறுப்பினராக முதலிலே தேர்ந்தெடுக்கப் பட்டு, நகராட்சி தலைவராக வந்து, பின்பு சட்டமன்ற உறுப் பினராக வந்து, தொடர்ந்து மக்கள் பணியாற்றிக் கொண்டிருந்த அவருடைய சேவையை இழந்தது அந்தத் தொகுதி மக்களுக்கு ஒரு மிகப் பெரிய இழப்பாக இருக்கிறது. அவரை இழந்து வாடு கின்ற அவருடைய குடும்பத்தினருக்கும், தொகுதி மக்களுக்கும், அவருடைய இயக்கத்திற்கும், இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து, அவை முன்னவர் அவர்கள் முன் மொழிந்த அந்த தீர்மானத்தை வழி மொழிந்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையில் முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவரும், மற்றக் கட்சி தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு என்னுடைய இரங்கலையும் மறைந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் குடும்பத்திற்கு, குறிப்பாக அவருடைய துணைவியாருக்கு தெரிவித்துக் கொள் கிறேன்.

1972 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்த நேரத்தில், நெல்லை மாவட்டத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்து உருவாக்கப் பாடுபட்ட கழக நண்பர்களில் அவரும் ஒருவர் என்பதை நான் நன்கு அறிவேன்.

கடந்த பொதுத் தேர்தலில் கணிசமான ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து, இங்கு நல்ல முறையில் பணியாற்றி உள்ளார்கள். எல்லோருடைய நம்பிக் கையும் மதிப்பையும் பெறக்கூடிய அளவிற்கு இங்கே உழைத்திருக் கிறார்கள். எதிர்பாராத விதமாக 2 முறை மாரடைப்பு அவர் களைத் தேடி வந்த நேரத்திலும்—அதைப்பற்றி நான் சொல்வேன் மாண்புமிகு உறுப்பினர் உத்திரபதி அவர்கள் சொன்னதைப் போல— அதைப் பொருட்படுத்தாத காரணத்தினால், இங்கே இருந்து நெல்லைக்கு பஸ்ஸிலே சென்ற காரணத்தினாலும் தான் மூன்றாவது முறையாக அந்த மாரடைப்பை அடைந்திருக்கிறார்கள் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

இந்த நேரத்தில் இந்த ஆண்டு இதே கூட்டத்தொடரிலே இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களை நாம் இழந்திருக்கிறோம். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் உங்களுடைய உரிமைக்கும் உங்களுடைய உயிருக்கும் ஓரளவிற்கு நான் பாதுகாப்பாக இருக்க வேண்டும், அந்த அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களை நல்லமுறையில் தங்கள் உடம்பைப் பரிசோதித்து பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். இரவு நேரங்களில் வாகனங்களில், மோட்டார் வாகனங்களில் அதிகமாகப் பயணம் செய்யக் கூடாது என்பதும் என்னுடைய வேண்டுகோளாகும். ஆகவே இந்த முறைகளைப் பின்பற்றுவோமானால் உண்மையிலேயே இது போன்ற இழப்புக்களை, நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் நம்முடைய சட்டமன்றத்திற்கும் ஈடுகட்டமுடியும்.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மறைந்த உறுப்பினர் திரு. எஸ். நாராயணன் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில்பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று,நாளை (13-5-1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். பின்னர் பேரவை 9-27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 2. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

96. கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு கிராமத்தில் கிறித்துவர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்கள் தொடர்பாக 1-3-1982 மற்றும் 15-3-1982 ஆகிய தினங்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து ஓய்வு பெற்ற நீதிபதி திரு. பி. வேணுகோபால் விசாரணைக் குழுவின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணைக்குழு சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

97. மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும், காவல் துறையினருக்குமிடையே ஏற்பட்ட மோதல் குறித்து விசாரிக்க மதுரை தெற்கு மாவட்ட முதன்மை செசன்சு நீதிபதி திரு. வி. சேதுசோமலயர், விசாரணைக் குழுவின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4), பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (அ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.- எதுவுமில்லை.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1,
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras

வெளியீடு 3-2-1987 Issued 3-2-1987

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 12, 1986-தொகுதி 27 எண். 3
Monday the May 12, 1986-Volume 27 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
**Legislative Assembly Secretariat, Fort St. George, Madras-600009**

விலை ரூ. 3] [Price Rs. 3

## உள்ளடக்கம்.

12—5—1986


| | | |
|---|---|---|
| 1. | இரங்கல் தீர்மானம் : | 305—314 |
| | பேரவை உறுப்பினர் திரு. எஸ். நாராயணன் அவர்கள் மறைவு குறித்து: | 305 |
| | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். | 306—307 |
| | திரு. உ. சுப்பிரமணியன். .. | 308 |
| | திரு. சு. பாலன். .. | 309 |
| | திரு. கு. ரமணி. .. | 309 |
| | திரு. பொ. உத்திராபதி. .. | 310 |
| | திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் .. | 311 |
| | டாக்டர் தே. குமாரதாஸ் . | 312 |
| | திரு. பி. கே. எம் முத்துராமலிங்கம் .. | 313 |
| | திரு. கு. தமிழரசன் .. | 313 |
| 2. | பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள். .. | 314 |


128-120—1

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, மே 12, திங்கட்கிழமை

சித்திரை 29, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு—2017

305
600 008.
136791

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.''

இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்சம் வருதலைப் போன்றது; பிறப்பு என்ப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் * * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. இரங்கல் தீர்மானம்.

பேரவை உறுப்பினர் திரு. எஸ். நாராயணன் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தொகுதியில் இருந்து இப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுபபினர் திரு. பாளை. எஸ். நாராயணன் அவர்கள் நேற்று (11-5-86) மாலை மாரடைப்பால் மறைந்த துயரச் செய்தியை இப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''இனிய பண்பும், நல்ல உள்ளமும், செயல் ஆற்றல் திறனும் கொண்டவரும், இப்பேரவையில், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினருமாகிய திரு. எஸ். நாராயணன் அவர்கள் நேற்று மாலை மாரடைப்பால் மறைந்த துயரச் செய்தி கேட்டு இப்பேரவை மிகவும் வருந்துகிறது. அன்னாரின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது''.

மாண்புமிகு உறுப்பினர் பாளை எஸ். நாராயணன் அவர்கள் நேற்றைய முன்னாள் வரையிலும் சட்டமன்ற நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டிருந்து விட்டு, எல்லோருடனும் இனிமையாகப் பேசி, பழகிக் கொண்டு தான் இருந்தார்கள். நேற்று காலை தான் அவர் நெல்லை போய்ச் சேர்ந்தார். சேர்ந்தவுடனே எட்டு மணி அளவில் அவருக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்ட உடனேயே அவரை பாளையங்கோட்டை மருத்துவ மனையிலே சேர்த்து தீவிரமான சிகிச்சை அளித்திருக்கின்றார்கள். ஆக, சிகிச்சை அளித்தும், பலன் ஏற்படாத வகையில் மாலை 3-15 மணி அளவிலே அவர் மறைந்து இருக்கின்றார். ஆகவே, பெரியதொரு அதிர்ச்சியை அனைவருக்கும் தரத்தக்க அளவிற்கு அவருடைய மறைவு ஏற்பட்டிருக்கின்றது. அண்மையிலேதான் அருப்புக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் பிச்சை அவர்கள் எதிர்பாராத ஆபத்திலே சிக்கி மறைந்ததன் மூலமாக ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து நாமெல்லாம் மீள முடியாத நிலையில், மற்றொரு அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள வேண்டிய அவல நிலைக்கு இந்த அவை ஆளாகியிருப்பது உள்ளபடியே பெருந்துன்பத்தை அளிக்கக்கூடிய ஒன்றாகும்.

பாளை நாராயணன் அவர்களுக்கு வயது 54 தான். அவர்கள் ஆரம்பக் காலத்திலேயிருந்தே திராவிட இயக்கத்திலே நீங்காப்பற்றும், தனியா ஆர்வமும் கொண்டு கொள்கைகளுக்காகப் பாடுபடுகின்ற நல்ல செயல் வீரராகத் திகழ்ந்தவர்கள் ஆவார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்திலே நெருங்கிய தொடர்பு வைத்து அதனுடைய கொள்கைளைப் பரப்புகின்ற பணிகளிலே மிகத் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்கள் ஆவார்கள்.

1984-இலே நடைபெற்ற பொதுத் தேர்தலில் நெல்லை தொகுதியிலே அவர்கள் போட்டியிட்டு நல்ல சிறப்பான முறையில் வெற்றி பெற்று இந்த அவைக்கு முதன் முறையாக அவர்கள் வருகை தந்தார்கள்.

அவர்கள் பொது வாழ்க்கையிலே நீண்ட பெரும் காலமாகவே நல்ல தொடர்புகளைக் கொண்டு அரும்பணிகள் பலவற்றையும் ஆற்றி வந்திருக்கின்றார்கள்.

பாளையங்கோட்டை நகராட்சிமன்ற உறுப்பினராக 1964-இலிருந்து 1969-வது ஆண்டு வரையிலும் பாளையங்கோட்டை நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியவர்கள். 1969-ஆம் ஆண்டிலிருந்து 1976-வது ஆண்டு வரையில் பாளையங்கோட்டை நகராட்சி மன்றத் தலைவராகயிருந்து பாளையங்கோட்டை நகர் வாழ் மக்களுடைய நல்ல அன்பையும், அரவணைப்பையையும் பெற்று, எல்லோருடைய பாராட்டுதலையும் போற்றுதலையும் பெற்று சிறப்பாகத் திகழ்ந்தவர்கள் ஆவார்கள்.





அது மட்டுமல்லாமல், கதர் வாரியத்தினுடைய துணைத் தலைவர் பொறுப்பையும் ஏற்று சில ஆண்டுக்காலம் அவர்கள் பணிபுரிந்து இருக்கின்றார்கள்.

அதோடு, தொழில் முதலீட்டுக் கழகத்தினுடைய இயக்குநர்களிலே ஒருவராக இருந்து அந்தப் பொறுப்பையும் ஏற்று சிறப்பான பணிகளை ஆற்றி இருக்கின்றார்கள்

அறநிலையத் துறையினுடைய வட்டாரக் குழுவினுடைய தலைவராக இருந்து பணியாற்றியும் வந்திருக்கிறார்கள். இப்படி பல்வேறு பொதுப் பொறுப்புகளிலே இடம் பெற்று, அவற்றின் மூலமாக பொது மக்களுக்கு ஆற்ற வேண்டிய தொண்டுகளை மக்களுக்கு சிறப்பாக ஆற்றியவர். தொகுதி வாழ் மக்களுடைய குறைகளைப் போக்குவதிலே மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்த அவர்கள், மனம் கோணாத அளவிற்கு பாடுபடுகின்ற பண்பு படைத்தவர்கள் என்பது மட்டுமல்லாமல், கழகத்தினுடைய பணிகளை சிறப்புற செய்வதிலேயும் மிக ஈடுபாடு கொண்டவர்கள் ஆவார்கள்.

அது மட்டுமல்லாமல் கழகக் கொள்கைகளிடத்திலே பிடிப்பு கொண்டு இருந்தவர், ஆரவாரமற்றவர், படாடோபமற்றவர், அவர் எடுத்த பணிகளை முடிக்க வேண்டும் என்பதிலே முனைப்பு உள்ளம் கொண்டவர். அப்படிப்பட்ட இனிய பண்புகளுக்கு உறைவிடமாக விளங்கியவர். அப்படிப்பட்ட ஒரு நல்ல நன்பரை இந்த அவை இழந்து விட்டது என்பது இந்த அவையில் உள்ள அத்தனை பேர்களுக்கும் அதிர்ச்சியையும், வேதனையையும் பெரும் வருத்தத்தையும், துக்கத்தையும் துயரத்தையும் அளிக்கக்கூடிய ஒரு செய்தியாகும். அவர்கள் மறைவு குறித்து இந்தப் பேரவை தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை, அன்னாருடைய குடும்பத்திற்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும், தெரிவித்துக் கொள்கிறது என்ற இந்த தீர்மானத்தை இந்தப் பேரவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று கிடைத்த அதிர்ச்சி தரும் செய்தி, நம்முடன் நேற்று முன் தினம் வரை பணியாற்றிய அருமை நண்பர் பாளை நாராயணன் அவர்கள் திடிரென காலமுற்ற செய்தி நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. அண்மையில்தான் அருப்புக்கோட்டைத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. பிச்சை அவர்கள் விபத்தில் மரணம் அடைந்த செய்தி கேட்டு, அந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் நாம் விடுபடாத நிலையில் மீண்டும் ஒரு அதிர்ச்சிக்கு நாம் ஆளாகி இருக்கிறோம். நம்முடைய பாளை நாராயணன் அவர்கள் மிகச் சிறந்த முறையிலே பொது ஜன சேவை செய்தவர் என்று அந்த மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்துக் கட்சியினராலும் பாராட்டப் படுகின்றவர். நல்ல சாதாரண மக்களிடமும் எல்லாத் தரப்பு மக்களிடமும் நல்ல முறையில் இனிய சுபாவத்துடன் பழகி, அவர்களுடைய

பிரச்சனைகளுக்கு வேண்டிய காரியங்களை ஆற்றுவதற்கு எல்லா விதமான முயற்சிகளையும் எடுத்து, கட்சி பேதமின்றி, ஜாதி பேதமின்றி உழைத்து வந்தார் என்ற செய்தி அவரைப் பற்றிய ஒரு நல்ல செய்தியாகும். இப்படி ஒரு நல்ல உள்ளம் கொண்ட, தூய தொண்டரை இழந்து நிற்கின்ற அன்னாருடைய குடும்பத்தினருக்கும், அவரைச் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அவருடைய இழப்பு மிகப் பெரிய இழப்பு என்பது மட்டுமல்லாது, அடுத்தடுத்து ஏற்பட்ட இந்த இழப்புகள் நம்முடைய இந்த மன்றத்திற்கும் பெரிய அதிர்ச்சியாக இருக்கின்ற காரணத்தால், அவருடைய மறைவு குறித்து பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்து இருக்கின்ற இரங்கல் தீர்மானத்தை நான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாக வழிமொழிந்து, என்னுடைய அனுதாபத்தையும் அவருடைய குடும்பத்திற்கு தெரிவித்து, அமர்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மறைந்த திருநெல்வேலி தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர் பாளை எஸ். நாராயணன் அவர்கள் சனியன்று இந்தப் பேரவையில் கலந்து கொண்டு, நம்முடன் கலந்து பேசி, நம்மை எல்லாம் பார்த்துவிட்டு, வீட்டுக்குச் சென்ற பிறகு அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையிலே அனுமதிக்கப் பட்டு இருக்கிறார் என்ற செய்தியை பத்திரிகையிலே நாம் பார்க்கிறபோது, அவர்கள் உள்ளபடியே இறந்து போய்விடுவார் என்ற நம்பிக்கை நமக்கு எல்லாம் ஏற்பட்டு இருக்காது. அதுவும் மனிதனுக்கு நோய் ஏற்படுகிற நேரத்தில், மருத்துவர்கள் அதை எல்லாம் சரி செய்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை இன்றையதினம் உலகத்தில் இருக்கிற நேரத்தில், இப்படிப்பட்ட இந்த வியாதியால் தாக்கப்பட்டு, பாளை எஸ். நாராயணன் அவர்கள் மறைந்த செய்தி நமக்கு எல்லாம் ஒரு பேரதிர்ச்சியாக இருந்துகொண்டு இருக்கிறது. இந்தக் கூட்டத் தொடரிலே இரண்டு சட்டப் பேரவை உறுப்பினர்களை நாம் இழந்திருப்பது அதைவிட மிக்க அதிர்ச்சியாக இருந்துகொண்டு இருக்கிறது. மறைந்த நாராயணன் அவர்கள் திராவிட இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பொதுமக்களிடத்திலே நல்ல பேரன்பு காட்டி, பொது சேவை செய்த ஒரு தொண்டராக விளங்கியவர். அதனால் நான் அவர்கள் பாளையங்கோட்டை நகராட்சியிலே உறுப்பினராக தேர்தெடுக்கப் பட்டு, அதன் பிறகு, அதனுடைய தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டு பணியாற்றினார் என்றால், பொதுமக்களிடத்திலே அவர் எவ்வளவு செல்வாக்கு பெற்று இருக்கிறார் என்பதை நாம் எல்லாம் நினைக்கக்கூடிய கட்டாயத்தில் இருந்து கொண்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட நல்ல தொண்டர்களை மக்களுக்கு

(முற்பகல் 9-10)

சேவை செய்யக்கூடிய பொறுப்பாளிகளை இன்றையதினம் நாடு இழக்கிறது. அது பொதுமக்களுக்கும் மிக தாங்கமுடியாத ஒரு துயரத்தை இன்றையதினம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆக ஒரு நல்ல தொண்டரை இழந்து வாடுகின்ற நிலையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்



இருக்கிறது. அவர்களுக்கு இது ஒரு பேரிழப்பாக இருந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் அவர் ஆற்றிய பணிகளை நாம் மனதில் கொண்டு அவருக்கு நாம் நன்றி தெரிவிக்கும் வகையிலே, அவரைப் போல் நாமும் மக்களுக்கு தொண்டாற்றக்கூடிய வாய்ப்பை நாம் பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அவரை பிரிந்து வாடுகின்ற அன்னாரது குடும்பத்தினருக்கும், தொகுதி மக்களுக்கும் அவரைச் சார்ந்திருக்கின்ற கட்சிக்கும், நம்முடைய முன்னவர் அவர்கள் கொண்டுவந்த அந்த தீர்மானத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் வழிமொழிந்து அமர்கிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் திரு. நாராயணன் அவர்கள் நேற்று வரையிலும் நம்மோடு அவையிலே இருந்து செயலாற்றியவர்கள். இப்போது நடக்கின்ற மரணங்கள், திடீர் மரணங்களாக வந்து நமக்கு பேரதிர்ச்சியை தந்து விடுகின்றன. இந்த கூட்டத் தொடரிலே இரண்டாவது உறுப்பினரை நாம் இழந்துள்ளது மிக சோகமான நிலை. அவர் தன்னுடைய வாழ்நாளில், திருநெல்வேலி மக்களுக்கு, நகரசபை உறுப்பினராக, தலைவராக நீண்ட பல வருஷங்கள் செயலாற்றி யிருக்கிறார் என்பதும், அவர் கொண்டுள்ள கொள்கையின்பால் மக்களை எப்படி ஆதரித்து மக்களுடைய பிரதிநிதியாக இருந்திருக் கிறார் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. அறநிலையத்தைச் சார்ந்த பணியிலும் அவர் ஈடுபட்டிருக்கிறார். இறுதியாக இந்த சட்டமன்றத்திற்கு உறுப்பினராக வந்து இன்னும் ஒரு டெர்ம் கூட, ஒருதரம் கூட முழுமையாக இந்த சட்டமன்றத்தில் இருந்து அவர் செயலாற்ற முடியவில்லை என்பது மிக வருந்தத்தக்க ஒரு விஷயம். ஆக இப்படிப்பட்ட ஒரு நல்ல ஊழியரை அதுவும் இளம் வயதிலேயே, இன்னும் பல ஆண்டுகள் செயல்பட வேண்டியவர், தன்னுடைய பொறுப்புகளை செய்யமுடியாமல் இறந்துபோவது என்பது ஆற்றமுடியாத ஒரு துன்பத்தையும், துக்கத்தையும் தருகிறது. அன்னாருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மரணம் காரண மாக தவிக்கின்ற அவரது குடும்பத்தினருக்கும், அவர் சேவை செய்த கட்சிக்கும் நமது மனமார்ந்த ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொண்டு, அவை முன்னவர் தெரிவித்திருக்கும்படியான தீர்மானத்தில் மார்க்சிஸ்ட் கட்சி தன்னையும் இணைத்துக் கொள் கிறது என்பதை தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டசபையில் 2-வது சட்டமன்ற உறுப்பினர் நாராயணன் அவர்களை இந்த சபை இழந்திருக்கிறது. அந்த தொகுதி மக்களும், நம்பிக்கையோடு ஒரு ஐந்தாண்டு காலத்திற்கு, அந்த தொகுதியின் பல்வேறு முன்னேற்றத்திற்கு பாடுபடக்கூடிய ஒரு நல்ல தொண்டரை, பணியாற்றக் கூடிய ஒரு நண்பரை

தேர்ந்தெடுத்து அனுப்பிய தொகுதி மக்களும் ஒரு பெரிய பேரிழப்பிற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதே போல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, அவர்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினரை இழந்து விட்டார்கள் என்று சொல்வதற்குப் பதிலாக இந்தச் சட்டப் பேரவை இரண்டாவதாக ஒரு சட்டமன்ற உறுப்பினரை இழந்து விட்டது என்று நினைக்கும்போது உண்மையிலேயே—நாளைய தினம் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்து நாம் அனைவரும் சந்தோஷத்தோடு போகக்கூடிய ஒரு நிலை மாறி—இந்த அவை யிலிருந்து கலைந்து செல்லுகின்றபோது ஒரு மன சஞ்சலத்தோடு வருத்தத்தோடு செல்லக்கூடிய ஒரு சோதனையை நாம் சந்திக்கக் கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கின்ற போது எதிர்காலத்திலாவது மக்களுக்கு பணியாற்றக் கூடிய சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, பொதுமக்கள் தொண்டனாக இருந்தாலும் சரி இப்படி சில நேரங்களில் வியாதி வருகின்றபோது அதை ஒரு அலட்சிய பார்வையோடு பார்த்து விடாமல் இதையெல்லாம் நாம் எதிர்நோக்கக்கூடிய அளவுக்கு நாம் சிந்திக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

மறைந்த திருநெல்வேலி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இந்த சட்டசபைக்கு முதல் தடவையாக வந்து அவர்களுடைய பணியை நிறைவாகச் செய்ய முடியவில்லை என்று நினைக்கிற போது உண்மையிலேயே அனைவருக்கும் இந்தச் செய்தியைக் கேட்டவுடனே பெரிய அதிர்ச்சியைத்தான் ஏற்படுத்தியது. மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. நாராயணன் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அவர்களுக்கு தலை வணங்கி அஞ்சலி செலுத்துவதோடு அவரை இழந்துவிட்டுத் தவித்துக் கொண்டிருக்கக்கூடிய அவருடைய குடும்பத்தினருக்கும் அனுதாபத்தைத் தெரிவித்து அதேபோல் ஒரு பொறுப்பான உறுப்பினரை இழந்து இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எங்களுடைய அனுதாபத்தைத் தெரிவித்து சட்டமன்ற உறுப்பினர் திரு. நாராயணன் அவர்கள் மறைவுக்காக இங்கே அவை முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இரங்கல் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வழிமொழிந்து அமர் கிறேன்.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அன்புக்குரிய அண்ணாச்சி பாளை நாராயணன் அவர்கள் நேற்று அகால மரணமடைந்தது குறித்து அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த அந்த இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக எங்களுடைய இரங்கலையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





நேற்று முன்தினம் நாங்கள் இருவரும் ஒன்றாகப் பக்கத்தில் இருந்து காஃபி சாப்பிட்டு சிரித்து விளையாடிக்கொண்டிருந்தோம். அரசியல் வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் ஆலோசனை கூறக்கூடிய வராக அவர் இருந்தார். எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆகிய எல்லோருடனும் அன்போடு சகோதர பாசத்தோடு பழகக் கூடிய நல்லவர் அவர். நாங்கள் எல்லாம் அவரை அண்ணாச்சி என்று அன்பாக அழைப்போம். அப்படிப்பட்ட ஒரு நல்லவரை, ஒரு நண்பரை இழந்து இன்று நாமெல்லாம் ஒரு ஆழ்ந்த துக்கத்திலே இருந்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக அவர்களுடைய வாழ்க்கையிலே நீண்ட நெடுங்காலமாக திராவிடபாரம்பரியத்திலே இருந்து பொதுமக்களுக்காக நல்லமுறையில் பணியாற்றி அதன் காரணமாக பல பொறுப்புக்களை, கட்சி பொறுப்புக்களை எல்லாம் அவர்கள் நல்ல முறையில் வகித்தவர்கள். அவர்களுடைய மறைவு தாங்கொணாத துக்கத்தைத் தந்துக்கொண்டிருக்கிறது.

அவரைப் பிரிந்து வாழும் அந்தக் குடும்பத்தாருக்கும் அவர் சார்ந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதன் தலைவருக்கும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக எங்களுடைய பரிவையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' திரு. பாளை நாராயணன் அவர்களுடைய மறைவு கேட்டு அனைவரும் அதிர்ச்சி அடைந்திருக்கின்ற இந்த நேரத்தில் அவரைப் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறலாம் என்று நான் கருதுகிறேன். அருமை அண்ணன் திரு. பாளை நாராயணன் அவர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு முன்பே எனக்கு அவரிடம் ஈடுபாடு உண்டு. நான் பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் பயின்று வந்தபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த அந்தக் காலத்தில் அதாவது 1978-79 வது ஆண்டு அங்கேயுள்ள மாணவர் களாகிய நாங்கள் எங்களுடைய கோரிக்கைகளை முன் வைத்து போராட்டம் நடத்தினோம். அந்த நேரத்தில் தாங்கள் போராட்டம் நடத்தியது தவறு என்று எல்லோரும் சுட்டிக்காட்டி னார்கள். அந்த நேரத்தில் கூட, உங்கள் பக்கம் நியாயம் இருக் கிறது, எனவே உங்களுக்காக நானும் சேர்ந்து அரசுடன் வாதாடு கிறேன் என்று சொல்லி எங்களை அழைத்து வந்து அன்றைக்கு சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. சௌந்திரராஜன் அவர்களிடத்திலே எங்களைப் பற்றிப் பேசி, குறைகளை எடுத்துச் சொல்லி, அந்தக் குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து தந்தார்கள். அப்போது கூட நாங்கள் ஜனதா

(முற்பகல் 9-20)

இயக்கத்தைச் சார்ந்தவர்களாகத்தான் செயல்பட்டுக்கொண்டிருந்தோம். அந்த நேரத்தில்கூட, அவர்கள் நாங்கள் வேறு கட்சியைச் சார்ந்தவர்கள், இந்த அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துகிறவர்கள் என்றெல்லாம் கருதாமல்கூட, மாறாக எங்களுடன் ஓடிவந்து, அந்த நேரத்திலே எந்த வகையில் எல்லாம் எங்கள் மாணவர்களின் இயக்கத்திற்கு தேவையான முக்கியமான கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றித் தந்து உதவ முடியுமோ அந்த வகையில் உதவிய அன்னாருடைய திருமுகத்தை நினைக்கிற போது, அவருடைய பண்பான செயல்களை நினைக்கும்போது, இந்த இழப்பைக் குறித்து உண்மையிலேயே மிக அதிர்ச்சியடைகிறோம். அப்படிப்பட்ட நல்லவர்.

குறிப்பாக சொல்லவேண்டும் என்றால், எல்லோரும் கூறுவதைப் போல ஜாதி மத இனங்களுக்கு அப்பாற்பட்டு எல்லோருடனும் பாசத்துடனும் பரிவுடனும் பழகுகிறவர். அந்த உத்தமரை இழந்து வாடுகின்ற அன்னாருடைய குடும்பத்தினருக்கு ஜனதா இயக்கத்தின் சார்பில் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவர் சார்ந்திருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கும், எங்கள் கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வழி மொழிந்து அமர்கிறேன்.

*திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாலைப் பத்திரிகையிலே பார்க்கிறபோது, நமது அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் பாளை எஸ். நாராயணன் அவர்கள் மறைந்த செய்தியை அதிலே கண்டு நாங்கள் அதிகமாக அதிர்ச்சியுற்றோம். இந்தச் சட்ட மன்றத்திலே தொடர்ந்து இரண்டாவது சட்டமன்ற உறுப்பினர் மறைந்திருக்கிறார். யாரும் எதிர்பார்க்காத ஒரு நிகழ்ச்சியாக இந்த இழப்பு இன்று ஏற்பட்டு இருக்கிறது. எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அமைதியான ஒரு பெரியவராக, முதன் முறையாக இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருந்தபோதிலும், பொது வாழ்விலே 20, 25 ஆண்டுக்காலமாக தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என்ற முறையிலே, எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாத ஒரு உறுப்பினராக அமைதியாக இந்த மன்றத்திலே இருந்து பணியாற்றியிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு மறைந்த செய்தி உண்மையிலேயே அத்தனை பேருக்கும் ஒரு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

அன்னாருடைய இழப்பை எண்ணி வருந்திக் கொண்டிருக்கிற அந்தத் தொகுதி மக்களுக்கும், இன்னும் அன்னாருடைய குடும்பத்தினருக்கும், அவரை இழந்து வாடிக் கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எங்க



ளுடைய அகில இந்திய ஃபார்வார்டு பிளாக் கட்சியினுடைய சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை வழி மொழிந்து அமர்கிறேன்.

*திரு. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் பாளை நாராயணன் அவர்களுடைய மறைவு மிகுந்த வேதனைக்குரியது. இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரே ஒரு சோகமயமான தொடராக இருந்துக் கொண்டிருக்கிறது. அருப்புக்கோட்டை பிச்சை அவர்கள் மறைந்ததைத் தொடர்ந்து, பாளை எஸ். நாராயணன் அவர்களும் மறைந்திருக்கிறார்கள். நமது சக உறுப்பினர்கள் இருவரை இந்தத்தொடரிலேயே நாம் இழந்துக் விட்டிருக்கிறோம்.

நகராட்சி மன்ற உறுப்பினராக முதலிலே தேர்ந்தெடுக்கப் பட்டு, நகராட்சி தலைவராக வந்து, பின்பு சட்டமன்ற உறுப் பினராக வந்து, தொடர்ந்து மக்கள் பணியாற்றிக் கொண்டிருந்த அவருடைய சேவையை இழந்தது அந்தத் தொகுதி மக்களுக்கு ஒரு மிகப் பெரிய இழப்பாக இருக்கிறது. அவரை இழந்து வாடு கின்ற அவருடைய குடும்பத்தினருக்கும், தொகுதி மக்களுக்கும், அவருடைய இயக்கத்திற்கும், இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து, அவை முன்னவர் அவர்கள் முன் மொழிந்த அந்த தீர்மானத்தை வழி மொழிந்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையில் முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவரும், மற்றக் கட்சி தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு என்னுடைய இரங்கலையும் மறைந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் குடும்பத்திற்கு, குறிப்பாக அவருடைய துணைவியாருக்கு தெரிவித்துக் கொள் கிறேன்.

1972 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்த நேரத்தில், நெல்லை மாவட்டத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்து உருவாக்கப் பாடுபட்ட கழக நண்பர்களில் அவரும் ஒருவர் என்பதை நான் நன்கு அறிவேன்.

கடந்த பொதுத் தேர்தலில் கணிசமான ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து, இங்கு நல்ல முறையில் பணியாற்றி உள்ளார்கள். எல்லோருடைய நம்பிக் கையும் மதிப்பையும் பெறக்கூடிய அளவிற்கு இங்கே உழைத்திருக் கிறார்கள். எதிர்பாராத விதமாக 2 முறை மாரடைப்பு அவர் களைத் தேடி வந்த நேரத்திலும்—அதைப்பற்றி நான் சொல்வேன் மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் சொன்னதைப் போல— அதைப் பொருட்படுத்தாத காரணத்தினால், இங்கே இருந்து நெல்லைக்கு பஸ்ஸிலே சென்ற காரணத்தினாலும் தான் மூன்றாவது முறையாக அந்த மாரடைப்பை அடைந்திருக்கிறார்கள் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

[பேரவைத் தலைவர்]

இந்த நேரத்தில் இந்த ஆண்டு இதே கூட்டத்தொடரிலே இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களை நாம் இழந்திருக்கிறோம். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் உங்களுடைய உரிமைக்கும் உங்களுடைய உயிருக்கும் ஓரளவிற்கு நான் பாதுகாப்பாக இருக்க வேண்டும், அந்த அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அனை வரும் தங்களை நல்லமுறையில் தங்கள் உடம்பைப் பரிசோதித்து பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். இரவு நேரங்களில் வாகனங்களில், மோட்டார் வாகனங்களில் அதிகமாகப் பயணம் செய்யக் கூடாது என்பதும் என்னுடைய வேண்டுகோளாகும். ஆகவே இந்த முறைகளைப் பின்பற்றுவோமானால் உண்மையிலேயே இது போன்ற இழப்புக்களை, நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் நம்முடைய சட்டமன்றத்திற்கும் ஈடுகட்டமுடியும்.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த உறுப்பினர் திரு. எஸ். நாராயணன் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில்பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (13-5-1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். பின்னர் பேரவை 9-27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 2. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

96. கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு கிராமத்தில் கிறித்துவர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்கள் தொடர்பாக 1-3-1982 மற்றும் 15-3-1982 ஆகிய தினங்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து ஓய்வு பெற்ற நீதிபதி திரு. பி. வேணுகோபால் விசாரணைக் குழுவின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணைக்குழு சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

97. மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும், காவல் துறையினருக்குமிடையே ஏற்பட்ட மோதல் குறித்து விசாரிக்க மதுரை தெற்கு மாவட்ட முதன்மை செசன்சு நீதிபதி திரு. வி. சேது சோலையர், விசாரணைக் குழுவின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.—

ஏதுவுமில்லை.

136491

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappali-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.